DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.192/2025**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பாரதி |
| Father Name | : | ராஜாங்கம் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025.

( எதிரி ஆஜர்.)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது முதல்நிலை காவலராக திலகர் திடல் சட்டம் ஒழுங்கு காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.02.2024ம் தேதி அன்று காலை சுமார் 05.45 மணிக்கு **சாட்சி எண்.3** சார்பு ஆய்வாளர் திருமதி.மருதலட்சுமி அவர்களுடன் நானும், **அ.சா. 1** தலைமை காவலர் அழகுமுருகன் என்பவரும் சரக ரோந்து செய்யும் போது, வைகை தென்கரை டிவிஎஸ் தோப்பு அருகே நின்று கொண்டிருந்த நபரை அழைத்து விசாரித்த போது, அவர் பெயர் லோகேஷ் த.பெ. முத்துக்குமார் என்றும் அவர் ஆரப்பாளையம் கிராஸ் ரோடு, சுப்பையா நாயுடு காம்பவுண்ட்டில் வசித்து வருவதாக கூறினார். எதற்காக இந்த இடத்தில் நிற்கிறீர்கள் என்று கேட்டதற்கு முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார். அவர் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டு, **சாட்சி எண்.3** சார்பு ஆய்வாளர் திருமதி.மருதலட்சுமி அவர்கள்

சோதனை செய்தார். அப்போது இடுப்பில் மறைத்து வைத்திருந்த சுமார் 58 செ.மீ வாள் போன்ற கத்தியை எந்த ஒரு ஆவணமும் இல்லாமல் வைத்திருந்தார். எங்கள் முன்னிலையில் எதிரியை சார்பு ஆய்வாளர் கைது செய்தார். மேலும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார், அதில் நானும், **அ.சா.1** அழகு முருகனும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள 2வது கையெழுத்து என்னுடையது.அந்த கையொப்பம் **அ.சா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் வாள்போன்ற கத்தியை அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும் **அ.சா.1** அழகு முருகனும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சியிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி எதிரி மீது வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை :–**</u>

<u>**மறு விசாரணை –**</u> இல்லை.

S/d– S.John Sundaral Suresh, B.Sc., M.L.,

IV Additional District Judge, Madurai.